ஸம்ஸ்கிருத முதற் புத்தகம்

(டா. ரா. கோ. பண்டார்க்கர் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு)

இரண்டாவது பதிப்பு

திருத்தியமைத்தது

பெண்ணாத்தூர்-சு. ஜானகிராமையர்

THE MODERN PRINTING WORKS,
MOUNT ROAD, MADRAS.

1921

பதிப்புரை

உலகில் தோன்றியுள்ள நாகரீகங்கள் பலவற்றினும் பழமையானும் பெருமையானும் சிறப்புற்றது 'ஆரிய நாகரீகமே. எல்லாவிதத் துறைகளிலும் பிறநாடுகளுக்கு ஞானகுருவாய் விளங்கியதும் இவ்வாரிய நாடாம். இது பண்டைக்கால சரித்திர ஆசிரியர்களின் துணிபு. ஆனல் பல காரணங்களால் இந்நாடு தற்போது சீர்குன்றித் தாழ்வுற்றுளது. தன் உன்னத நிலையை மீள அடையத் தேசாபிமானம் என்னும் அவா தோன்றி, நாடெங்கும் பரவி வருவதைக் காண்கிறோம். ஒரு தேசத்தின் முற்போக்கு உண்மையா யிருக்கவேண்டுமாயின், அது தன்பழைய இயல்பை ஆதாரமாகக்கொண்டே அமையவேண்டும். பிறநாட்டியல்பைப் பின்பற்றுவதினுல் உண்மையான அபிவிருத்தி ஏற்படாது. 'நம் ஆரிய நாகரீகம்' தற்போது நூற்கண்ணே இலைமறை காய்போல் மறைந்து கிடக்கின்றது. அவ்வடமொழி நூல்களின் உட்பொருளை உணர பாஷாஞானம் இன்றியமையாத் துணையாம். பாஷாபிமானமின்றிச் சுதேச பாஷையின் வளர்ச்சியின்றி நாம் பெருமையை எதிர்பார்த்தல் ஆடையின்றி அலங்கரித்தலை யொக்குமன்றோ?

ஆரிய பாஷையை அறிய அவாவுடையோர்க்கு ஏற்ற சாதனங்கள் இத்தென்னுட்டில் மிகவருமை. எல்லா வருணத்தார்க்கும் படிக்கப் போதிய உதவி இல்லை. அதுபற்றி சில நண்பர்களின் தூண்டுதலால் ஆங்கிலத்தில் ஸர். ராமகிருஷ்ண கோபால பாண்டாரகர் இயற்றியுள்ள முதல், இரண்டாம் புத்தகங்களை அவரனுமதி பெற்றுத் தமிழில் மொழி பெயர்க்கலானேன். அவற்றுள் முதற்புத்தகம் மூன்று வருஷங்களுக்கு முன் வெளிவந்தது பலரும் அறிந்த விஷயம். அப்பதிப்பு தமிழ்மக்கள் யாவராலும் விரும்பி ஏற்றுக்கொள்

ளப்பட்டது, அவர்கள் பாஷாபிமானத்தை விளக்குகிறது. அம்முதற்பதிப்பில் உள்ள பிழைகளைத் திருத்தி சில நண்பர்கள் வேண்டியபடி இலக்கிய பாகம் கொஞ்சம் கூட்டி இவ்விரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது. அதிக விலைகொடுத்தும் வேண்டிய காகிதம் அகப்படாமையாலும், இடையிடையே ஏற்பட்ட வேலை நிறுத்தம் காரணமாக அச்சுக்கூட வேலைக்காரர்கள் ஒழுங்காக வேலைக்கு வராமையாலும் ஏற்பட்ட பல இடையூறுகளால் நான் எண்ணியபடி இவ்விரண்டாம் பதிப்பை முன்னரே வெளியிடக்கூடவில்லை.

இதைப் படிக்கப்புகுவோர் ஒவ்வொரு பாடத்திலுமுள்ள இலக்கண பாகத்தையும் ஆங்குள்ள சொற்களையும் அவற்றின் பொருளையும் செவ்வனே முன்னரறியவேண்டும். பின்னர் வடமொழி வாக்கியங்களைத் தென்மொழியிலும், தென்மொழி வாக்கியங்களை வடமொழியிலும் மொழிபெயர்க்கவும். அப்போது ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இலக்கணத்தைக் கவனிக்கவேண்டியது. ஒரே இலக்கண விதியை வாக்கியந்தோறும் மீளமீளப் பயிலவேண்டுமாயினும் அதில் சோம்பலுறக்கூடாது. அப்போதுதான் புத்தி தெளிவடைந்து தேர்ச்சி எளிதில் கைகூடும். சொற்ப நுண்ணறிவுடையவர்கள் பிறருதவியின்றியே இந்நூலைக்கொண்டு வடமொழியில் போதிய தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

கல்விப் பொருளும் செல்வப் பொருளும் மிக்க உடையார் செய்தற்குரிய இவ்வரும் காரியத்தை அற்பக் கல்வியும் சிற்றறிவும் உடைய எளியேன் இயற்றத் துணிந்ததையும் அதனால் நிகழக்கூடிய குற்றங்களையும் நல்லறிஞர் பொறுத்தருளுமாறு அவரைப் பிரார்த்திக்கின்றேன்.

ஐயன்குள அக்கிராகாரம்,
திருவண்ணாமலை,27-12-20. } பென்னாத்தூர் - சு. ஜானகிராமன்.

முகவுரை

ஒவ்வொரு எழுத்தும் பல ஒலிகளையன்றி ஒரே ஒலியை உணர்த்தக் கூடியதாய் இருத்தலும், சகலவித ஒலிகளையும் உணர்த்தவல்ல எழுத்துக்களை உடைத்தாயிருத்தலுமே ஓர் பாஷை பூரணம் என்பதற்கு அறிகுறியாம். இத்தகைய பூர்ண பாஷை ஒன்று இருப்பின் அது நூறு அல்லது ஆயிரக்கணக்கான தனி எழுத்துக்களை உடைத்தாயிருக்கும். ஆனால் இப்பேர்ப்பட்ட பூர்ண பாஷை இலதாம். ஒவ்வோர் ஜன சமூகமும் தம்தம் மனோபாவங்களுக்கு ஏற்பவும், உச்சரிக்கக்கூடிய அவயவங்களுக்கு ஏற்பவும், எழுத்துக்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. தற்காலம் உலகில் வழங்கும் எல்லாப் பாஷைகளிலும் ஆரியர்களால் வழங்கப்பெற்ற ஸம்ஸ்க்ருத பாஷையே சற்றேறக்குறைய பூரணம் என்னலாம்.

வடமொழியில் அச்சு அல்லது சுரம் எனப்படும் ஒன்பது உயிர்களும், ஹல் அல்லது வ்யஞ்சனம் எனப்படும் முப்பத்துமூன்று மெய்களும், ஆக நாற்பத்திரண்டு வர்ணங்கள் உள. இவ்வொன்பது உயிர்களில் अ, इ, उ, ऋ, ऌ, என்பவைகள் தனி எழுத்துக்களாம். ए, ऐ, ओ, औ, என்பவைகள் சந்தி அக்ஷரங்களாம். ஓர் உயிர், குறில் (ஹ்ரச்சுவம்) ஆகவாவது, நெடில் (தீர்க்கம்) ஆகவாவது, அளபெடை (புலுதம்) ஆகவாவது இருக்கும். கோழி, கு கூ கூஉ எனக் கூவும் போது மேற்கூறிய குறில் முதலிய மூன்றின் உச்சாரண கால அளவையை உணர்த்துகிறது. அளபெடை வேதத்திலன்றி உலகவழக்கில் மிகுதியாயின்மையின் இப்புத்தகத்தில் எழுதப்படவில்லை. ஆகவே மேற்கூறிய ஐந்து தனி எழுத்துக்களும் குறில் நெடில் எனப் பத்தாய் நான்கு சந்தி எழுத்துகளோடுகூடிப் பதினான்கு உயிர்களாகின்றன.

மெய்கள் ஸ்பரிசங்களென்றும் அந்தஸ்தங்களென்றும் ஊஷ்மாணங்களென்றும் மூவகைத்தாம். ஐந்து வர்க்கங்களும் ஸ்பர்சங்களாம். இடை எழுத்துக்களாகிய य, र, ल, व,

என நான்கும் அந்தஸ்தங்களாம். ஏனையவைகள் ஊஷ்மாணங்களாம். மீண்டும் மெய்கள் மென்கணம் (घोषाः) என்றும், வன்கணம் (अघोषाः) என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள.

மேலும் வடமொழியில் अ, ए, ओ, अर्, अल्, என்பவைகளைக் குணவெழுத்துக்களென்றும், आ, ऐ, औ, आर्, आल्, என்பவைகளை விருத்தி எழுத்துக்கள் என்றும் கூறுவர்.

வடமொழியில் சந்தி (புணர்ச்சி) மிகவும் முக்கியமானது. வேகமாய் உச்சரிக்குங்கால் ஓர் சொல்லின் பின் வேறோர் சொல் வர முன்னதின் வாலும் பின்னதன் தலையும் ஒன்றோடொன்று சேர்வது இயல்பாம். இப்படிச் சேர்ந்து ஆன புதிய உருவத்தில், முன்னர் எந்த எழுத்துக்கள் சேர்ந்தனவோ, அவற்றின் அறிகுறி இருந்தாலும் பாலகனால் எளிதில் அவற்றைப் பகுத்துணர முடியாது. இத்தகைய சேர்க்கை எல்லாப் பாஷைகளிலும் நிகழ்கிறது. ஆனால் வடமொழியைப் போன்று பேச்சை ஒட்டி எழுத்துக்களும் எழுதப்படுகிற பாஷைகளில் சந்தி விதிகள் பல உள. அப்புணர்ச்சி பொதுவாய் இயல்பு, விகாரம் என இருவகைத்து. எழுத்துக்கள், யாதொரு விகாரமும் அடையாமல் ஒன்றோடொன்று கூடுவதே இயல்புப் புணர்ச்சியாம்.

(உதாரணம்) பொன்+மணி=பொன்மணி

புகழ்+அழகு=புகழழகு

இவ்வுதாரணங்களில் பொன், புகழ், என்பன நிலைமொழிகள் எனவும், மணி, அழகு, என்பன வருமொழிகள் எனவும் படும். புணர்ச்சியானது மேற்கூறியபடி நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலும் நிகழும்.

விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல்.

என மூவகைத்து. (உ-ம்.)

யானை+கோடு=யானைக்கோடு (தோன்றல்)

எள்+நெய்=எண்ணெய் (திரிதல்)

நிலம்+வளம்=நிலவளம் (கெடுதல்)

இவ்விருவகைப் புணர்ச்சிகளும் அன்றி விகற்பப்புணர்ச்சி என ஒன்று உண்டு. ஓர்கால் ஓர்விதமாகவும் வேறோர்கால் வேறுவிதமாகவும் புணர்வது விகற்பமாம். (உ-ம்.)

நட+கொற்றா=நடகொற்றா, நடக்கொற்றா.

சகல பாஷைகளிலும் சொற்கள் பொதுவாகப் பெயர், வினை, இடை, உரி என நால்வகைப்படும். கல், மரம், மணி தன் முதலிய போன்று, ஓர் பொருளின் பெயரைச்சொல்வது பெயர்ச் சொல்லாம். பெயர்ச் சொற்கள் எல்லாம் சுபந்தங்களாம். ஆனால், சுபந்தங்கள் எல்லாம் பெயர்ச்சொற்கள் அல்ல, விசேஷணங்களும் (பெயர் உரிச்சொற்களும்) சுபந்தமாதலின், சுப் என்பது வேற்றுமை உருபுகளுக்கு ஓர் சம்ஞையாம். இத்தகைய வேற்றுமை உருபை அதாவது சுப்பை ஈற்றில் உடையவைகள் சுபந்தங்களாம்.

பெயர்ச்சொற்களுக்குப் புல்லிங்கம், ஸ்திரீலிங்கம், நபும்ஸகலிங்கம் என லிங்கங்கள் மூன்று உள. தமிழில் ஆண்குறியுள்ளதை ஆண்பால் எனவும், பெண் குறியுள்ளதைப் பெண்பால் எனவும், கூறுவதுபோல் வடமொழியில் லௌகிகக் குறியைக் கொண்டு லிங்க நிர்ணயம் செய்யவொண்ணாது. நிகண்டு முதலிய நூல்களில் எச்சொற்களுக்கு எந்த லிங்கம் கூறியிருக்கின்றனரோ அப்படியே கொள்ளவேண்டும். மனைவி என்னும் ஒரே பொருளை யுணர்த்த दार (புல்லிங்கம்), भार्या (ஸ்திரீலிங்கம்), कलत्र (நபும்ஸகலிங்கம்) என மூன்று லிங்கங்களிலும் மூன்று சொற்கள் உள. இவ்வுதாரணத்தினின்று லிங்க நிர்ணயஞ் செய்வது சாஸ்திரவாயிலாலன்றி வேறு விதமாக முடியாதென்பது விளங்கும்.

எண்கள், ஒருமை, இருமை, பன்மை என மூன்றும். ஒரே பொருளைக் கூறுவது ஒருமையாம். இரண்டு பொருள்களைக் கூறுவது இருமையாம். இரண்டிற்குமேல் பலபொருள்களைக் கூறுவது பன்மையாம். இவற்றை முறையே ஏக வசனம், துவி வசனம், வஹு வசனம் என்பர்.

வேற்றுமைகள் எட்டாம். அவற்றை ப்ரதமை, த்விதியை, த்ருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, ஸப்தமி, சம்போ

நமீ என வழங்குகின்றனர். இதை யொட்டியே தமிழிலும் இவை முறையே முதலாம், இரண்டாம், மூன்றும், நான்காம், ஐந்தாம், ஆறும், ஏழாம், விளி, வேற்றுமைகள் எனப்படுகின்றன. ஒவ்வொரு வேற்றுமையிலும் மூன்று எண்களையும் காட்ட மூன்று உருபுகளாக, மொத்தம் இருபத்தொரு உருபுகள் உள. எட்டாம் வேற்றுமைக்கு முதல் வேற்றுமை உருபுகளேயன்றி தனியாக உருபுகள் இல்லை. இவ்வுருபுகளுக்குத்தான் சுப் என்பது குறிப்பெயர். சொற்களை வேற்றுமைப் படுத்துவதற்காக அஜந்தம் (உயிரீறு) ஹலந்தம் (மெய்யீறு) என்று பிரித்திருக்கிறது. ஸமானலிங்க, ஸமான வீற்றுச் சொற்கள் எல்லாம் பொதுவா யொரே மாதிரி வேற்றுமைப் படும். உதாரணமாக, புல்லிங்க அகர ஈறுகிய राम சப்தத்தைப் போன்று புல்லிங்க அகரவீற்று மற்ற சப்தங்களும் வேற்றுமைப்படும். இவ்வேற்றுமை யுருபுகளை ஏற்கு முன் பெயர்ச்சொற்கள் சில விகாரமடைகின்றன. வேற்றுமை யடையக்கூடிய சொற்களின் இயல்பான ரூபம் ப்ராதிபதிகம் எனவும், வேற்றுமை யுருபுகளை மாத்திரம் ஏற்குமுன் அவைகள் அடைந்துள்ள ரூபம் அங்கம் எனவும், வேற்றுமை யுருபுகளை அடைந்த அவற்றின் ரூபம் சுபந்தம் எனவும் படும்.

விசேஷணம் என்னும் ஒருவகைச் சொல்லும் வேற்றுமைப்படும் என்று கூறப்பட்டது. விசேஷணமாவது ஓர் பொருளிலிருக்கிற விசேஷத்தைக் கூறும் சொல்லாம். எப்பொருளிலுள்ள விசேஷம் விசேஷண மொழியால் கூறப்படுகிறதோ அது விசேஷ்யம் எனப்படும். இவ்விசேஷம் ஜாதி, தொழில், குணம், சங்கியை, த்ரவியம், ஸம்ஜ்ஞை என்பவற்றுள் ஒன்றைப்பற்றியதாயிருக்கும். தமிழ்ப் பாஷையில் விசேஷணம் ஒரே வடிவமாகவிருக்கும். நல்ல குதிரை என்பதில் நல்ல என்பது குணத்தைக்கூறும் விசேஷணச் சொல்லாம். குதிரை விசேஷ்யமாம். நல்ல குதிரைகள், நல்ல குதிரைகளால், எனக் குதிரையென்னும் சொல் வேற்றுமையிலும் எண்ணிலும் மாறுபட்டாலும் நல்ல என்னும் விசேஷணச் சொல் ஒரே வடிவாயிருக்கிறது. வடமொழியிலோ இப்படி யன்று. வடமொழி முறைப்படி கூறவேண்டுமாயின் நல்லவைகள் குதிரைகள், நல்

லவைகளால் குதிரைகளால், என நல்ல என்றும் விசேஷணச் சொல்லும் விசேஷ்யச் சொல்லின் லிங்கவசன வேற்றுமைகளை அனுசரிக்கவேண்டும். ஆகவே வடமொழியில் விசேஷணங்கள் எல்லாம் லிங்கவசன வேற்றுமைகளில் விசேஷ்யங்களை ஒக்கும்.

போதல், நடத்தல், விழ்தல் முதலிய தொழில்களைக் காட்டும் गम्, नी, पत முதலிய சொற்கள் வினைச்சொற்களாம். இவ்வினைச் சொற்களோடு விகுதிகள் எனப்படும் சில வெழுத்துக்கள் சேர்ந்தால் அவ்வினையைச் செய்தவன் இன்ன இடம் இன்ன எண் என்பவற்றையும் தொழில் நடைபெறும் காலம் இன்னது என்பதையும் தெரியலாகும். (உ-ம்) पतामि விழ்கிறேன் என்னும் வினைமுற்றிலுள்ள मि விகுதி, விழ்தல் தொழிலைச் செய்தவன் நான் என்று தன்மை இடத்தையும், ஒருவன் என்று ஒருமை எண்ணையும், தொழிலின் காலம் நிகழ்காலம் என்பதையும் உணர்த்துகிறது.

ஈண்டு கூறிய இடம் மூன்றும். அவையாவன :—தன்னையுணர்த்துவது தன்மை (உ-ம்) நான் போகிறேன் நாம் போகிறோம்.

எதிரிலிருக்கும் பொருளையுணர்த்துவது முன்னிலையாம் (உ-ம்) நீ போகிறாய், நீர் போகிறீர்.

இவை இரண்டுமல்லாத பிறபொருளையுணர்த்துவது படர்க்கையாம். (உ-ம்) அவன் போகிறான், அவள் போகிறாள், அது போகிறது, அவர்கள் போகிறார்கள், அவைகள் போகின்றன. இடத்தைப் புருஷன் என்றும், தன்மை, முன்னிலை, படர்க்கைகளை உத்தம, மத்திம, ப்ரதமங்கள் என்றும் கூறுவர். எண் மேலே கூறப்பட்டது. காலமும் அநேக வகைப்படும். சென்ற காலத்தில் நடந்ததை இறந்த காலத்திலும், இப்பொழுது நடக்கின்றதை நிகழ்காலத்திலும், இனி நடக்கப்போவதை எதிர்காலத்திலும் கூறுவர். இறந்தகாலத்தில் மூன்று பாகுபாடு, நிகழ்காலத்தில் ஒன்று, எதிர்காலத்தில் இரண்டு ஆக ஆறுகால பாகுபாடுகளோடு ஏவல் அல்லது விதித்தல் பொருள், வியங்கோள், வாழ்த்துதல் பொருள்,

சங்கேதப்பொருள் என நான்குகளையும் காட்ட விகுதிகள் உண்டு. இப்பத்தனுள் ஒவ்வொன்றிலும் மூவிடம் மூவெண் களையும் காட்ட ஒன்பது விகுதிகள் உள. இவ்வாறு, காலத்தையும் எண்ணையும் இடத்தையும் தெரிவிக்கும் வினைமுற்று விகுதிகள் பரஸ்மை (பிறன் பொருட்டு) பதம் எனவும், ஆத்மனே (தன் பொருட்டு) பதம் எனவும் இருவகைத்து. பரஸ்மைபத விகுதிகளைமாத்திரம் சேர்த்துக்கொள்ளும் வினைகள் பரஸ்மைபதிகளாம். ஆத்மனேபத விகுதிகளைமாத்திரம் சேர்த்துக்கொள்வன ஆத்மனேபதிகளாம். இருவகை விகுதிகளையும் சேர்ந்துக்கொள்வன உபயபதிகளாம் (உ-ம்) पच् உபயபதியாம். பிறன் பொருட்டு சமைக்கின்றான் எனக்கூற வேண்டும்போது பரஸ்மைபத விகுதியேற்று पचति எனவாகிறது, தன் பொருட்டு சமைக்கிறான் எனும்போது ஆத்மனேபத விகுதியேற்று पचते என ஆகிறது.

வடமொழியில் வினைகள் எல்லாம் பத்துகணங்களாகப் பிரிக்கப்பட்டுள. கணம், கூட்டம், தொகுதி. ஒவ்வொரு கணத்துக்கும் அந்தந்த கணத்திலுள்ள முதல் வினையைக் கொண்டு பெயரிட்டுளது.

भ्वादि=भू வை முதலில் உடையது (முதற் கணம்)
अदादि=अद् ஐ முதலில் உடையது (இரண்டாங் கணம்)
दिवादि=दिव् ஐ முதலில் உடையது (நான்காங் கணம்)
तुदादि=तुद् ஐ முதலில் உடையது (ஆறுங் கணம்)
चुरादि=चुर् ஐ முதலில் உடையது (பத்தாங் கணம்)

இக்கணங்கள் தாம் இம்முதற் புத்தகத்தில் எழுதப்பட்டுள. ஒரே மாதிரி விகாரத்தையடையும் வினைகள் எல்லாம் இனம்பற்றி ஒரு கணத்தில் சேர்க்கப்பட்டுள. விகுதிகளைக் கூட்டு முன் விகாணம் என்னும் ஓர் எழுத்து வினைப் பகுதியோடு கூட்டப்படுகிறது. இவ்விகாணம் சேர்வதால் வினைப்பகுதிகள் சில விகாரத்தை யடைகின்றன. கணங்கள் தோறும் விகாணம் பேதப்படும், பகுதிகள் அடையும் விகாரமும் பேதப்படும். இப்பேதங்களைக்கொண்டே பத்து கணங்

களுக்குமுள்ள பரஸ்பர பேதம் அறியத்தக்கது. கால எண் இடங்களைக் காட்டும் விகுதிகளுக்கு திங் என்று சம்ஞை யாம். இவ்விகுதிகளை ஈற்றிலுடையவைகள் திஙந்தங்களாம். வினைப்பகுதி தாது எனவும், விகரணம் சேர்ந்து விகாரமடைந்த தாதுவின் ரூபம் அங்கம் எனவும், விகுதியை யடைந்த அதன் முடிந்த ரூபம் திஙந்தம் எனவும் படும்.

வினைகள் ஸகன்மகம், அகன்மகம் என இருவகைத்து. குடத்தைச் செய்தான், கோயிலைக் கட்டினன் என்பவற்றுளுள்ள வினைகள் ஸகன்மகங்களாம் (செயப்படு பொருள் உடையவைகளாம்). தூங்கினன், நடந்தான் என்னும் வினைகள் அகன்மகங்ளாம் (செயப்படுபொருள் இல்லாதனவாம்). சில வினைகள் இரண்டு செயப்படுபொருள்களை எடுத்தலும் உண்டு. பசுவைப் பாலைக் கறந்தான் என்னும் வாக்கியத்தில் உள்ள வினை த்விகன்மகமாம் (இரண்டு செயப்படு பொருள்கள் உடையதாம்). இவ்விரண்டினுள் பால் பிரதான செயப்படு பொருளாம்; பசு, கௌண (முக்கியமல்லாத) செயப்படு பொருளாம். 'பிரதான செயப்படுபொருள் எப்பொழுதும் இரண்டாம் வேற்றுமையிலேயே வரும். கௌணமானது நான்காம் வேற்றுமை அல்லது ஆறும்வேற்றுமையிலும் வரும்.

வடமொழியில் பிரயோகங்கள் மூன்றுவிதம்; கர்த்தரிப் பிரயோகம், கர்மணிப் பிரயோகம், பாவே பிரயோகம் என்பவைகளே. முன்னது தமிழில் செய்வினை எனவும் மற்றிரண்டும் செயப்பாட்டு வினை எனவும் படும்.

கர்த்தரிப் பிரயோகத்தில் செயப்படு பொருள் குன்றிய வினையும் செயப்படுபொருள் குன்றா வினையும் வரும். (உ-ம்) சாத்தன் வரும் (அகன்மகம்); சாத்தன் ஆடையைத் தரும் (ஸகன்மகம்).

செயப்படு பொருள் குன்றிய வினையை செயப்பாட்டு வினையாக்க பாவே பிரயோகமாம்.

உதாரணம். சாத்தனல் வரப்படும்.

செயப்படுபொருள் குன்றா வினையை செயப்பாட்டு வினையாக்க கர்மணி பிரயோகமாம். (உ-ம்) சாத்தனல் ஆடை தரப்படும்.

கர்த்தரிப் பிரயோகம்.

1. கர்த்தா முதல் வேற்றுமையில் இருக்கும். கர்மம் இருந்தால் இரண்டாம் வேற்றுமையில் இருக்கும்.

2. வினை ஸகன்மகமாயும் அகன்மகமாயும் இருக்கும்.

3. வினைகள் பாஸ்மைபத விகுதிகளையேனும் ஆத்மனேபத விகுதிகளையேனும் ஏற்றுக்கொள்ளும்.

கர்மணிப் பிரயோகம்.

1. கர்த்தா மூன்றும் வேற்றுமையிலும், கர்மம் முதல் வேற்றுமையிலும் இருக்கும்.

2. வினைகள் ஸகன்மகங்களே.

3. வினைகள் ஆத்மனேபத விகுதிகளையே ஏற்கும்.

பாவே பிரயோகம்.

1. கர்த்தா மூன்றும் வேற்றுமையிலிருக்கும்.

2. வினைகள் அகன்மகங்களே.

3. வினைகள் ஆத்மனேபத விகுதிகளையே ஏற்கும்.

இப்பிரயோகத்தில் படர்க்கை யொருமை விகுதி மாத்திரம் வரும். வினைகள் தன்மை, முன்னிலை இடங்களிலும் இருமை பன்மை எண்களிலும் வாரா.

வினைகள் முற்று எனவும் எச்சம் எனவும் இருவகைப் படும். நடந்தான், போனான், என்பன வினைமுற்றுக்களாம். நடந்து, போய், என்பன வினையெச்சங்களாம். எச்சம் என்றால் குறைவு. இவ்வெச்சம் வினையெச்சம் எனவும் பெயரெச்சம் எனவும் இருவகைத்து. தான் கொண்டு முடியும் சொல்லாகிய பெயர் எஞ்சி நிற்பது பெயரெச்சமாம். நடந்த மனிதன். தான் கொண்டு முடியும் சொல்லாகிய வினை எஞ்சி நிற்பது வினையெச்சமாம். நடந்து வந்தான். இவ்விருவகை எச்சங்களும் வினையடியாகப்பிறக்கும் விதம் இருபத்து நான்காம் பாடத்தில் கூறியுளது. இவற்றுள் பெயரெச்சம் தொழிலையுணர்த்தும் விசேஷணத்தின்பால் படும்; ஆகவே பெயரெச்சம் சுபந்தமாம்; வினையெச்சமோ வேற்றுமைப்படாதது பற்றி அவ்யயமாம்.

அவ்வியயம் என்பது ஒருபோதும் யாதொரு விகாரத்தையும் அடையாமல் பிறநதவண்ணம் இருப்பதாம். இடைச்சொற்கள் எல்லாம் இதன் பால் படும். உரிச்சொல்லை பெயருரிச்சொல், வினையுரிச்சொல் எனப்பிரித்து பெயருரிச்சொல்லாகிய விசேஷணத்தை சுபந்தத்தின் கண்ணும் வினையுரிச்சொல்லாகிய கிரியா விசேஷணத்தை அவ்வியயத்தின் கண்ணும் அடக்கி வடமொழி முறைப்படி எல்லாவற்றையும் சுபந்தம் திஙந்தம் என இரண்டினுள் புகுத்தலாம். தமிழிற்கும் ஆரியத்திற்கும் உள்ள வேற்றுமைகளை இம்முதல் புத்தக சம்பந்தப் பட்டமட்டில் சிறிது கூறி இமமுகவுரையை முடிப்பன்.

எழுத்துக்கள்.

தமிழ்	ஆரியம்
வடமொழியில் இல்லாது தமிழுக்கே உரிய எழுத்துக்கள். எ, ஒ, ழ, ள, ற, ன, ஃ.	தமிழ் மொழியில் இல்லாது வடமொழிக்கே உரியவெழுத்துக்கள் ஈ, ஈ, ஈ, ஐந்து வர்க்கங்களிலும் உள்ள இடைமூன்றெழுத்துக்கள், ஊஷ்மாணங்கள், அனுஸ்வாரவிஸர்க்கங்கள்.

பதம்.

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்.	சுப் திஙந்தம் பதம் (வேற்றுமை யுருபையாவது வினை விகுதியையாவது ஈற்றில் உடையதே பதமாம்).

பெயர்ச் சொற்கள்.

பால் ஐந்து. திணை இரண்டு. பாலின் வேற்றுமை உலகக் குறியால் அறியத்தக்கது.	லிங்கம் மூன்றும். திணை இல்லை. லிங்கவேற்றுமை சாஸ்திர முகமாய் அறியத்தக்கது.
ஒருமை பன்மை என எண் இரண்டாம்.	ஒருமை இருமை பன்மை என எண் மூன்றும்.
முதல் வேற்றுமைக்கு உருபில்லை.	முதல் வேற்றுமைக்கு உருபுண்டு.

வி னை க ள்.

காலம் காட்ட இடைநிலையும் பால் எண் வேற்றுமைகளைக் காட்ட விகுதிகளும் உள.	காலம் எண் முதலியவற்றை விகுதி ஒன்றே காட்டும் பால் வேற்றுமையை விகுதி காட்டாது.
பெயரெச்சங்கள் வேற்றுமைப் படா.	பெயரெச்சங்கள் வேற்றுமைப்படும்.
ஏவல் முன்னிலையில் மட்டில் வரும்.	ஏவல் மூன்றிடத்தும் வரும்.

குண விருத்திகளைக்காட்டும் அட்டவணை.

சாதாரண உயிர்	अ	इ,ई	उ,ऊ	ऋ,ॠ	ऌ
குணம்	अ	ए	ओ	अर्	अल्
விருத்தி	आ	ऐ	औ	आर्	आल्

எழுத்துக்களின் பிறப்பிட அட்டவணை.

अ	इ	ऋ	ऌ	उ	ञ	ए	ओ	व
क	च	ट	त	प	म	ऐ	औ	
ख	छ	ठ	थ	फ	ङ			
ग	ज	ड	द	व	ण			
घ	झ	ढ	ध	भ	न			
ङ	ञ	ण	न	म				
ह	य	र	ल					
	श	ष	स					
கழுத்து	அண்ணம் (தாலு)	உச்சி மூர்த்தா	பல்	உதடு	மூக்கு	அண்ணமும் கழுத்தும்	கழுத்தும் உதடும்	பல்லும் உதடும்

27—12—16.
ஐயன்குளஅக்கிராகாரம்,
திருவண்ணாமலை.

சு. ஞானகிராமன்.

விஷய சூசிகை

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं
चतुर्भुजं प्रसन्नवदनं ध्यायेत
सर्वविघ्नोपशान्तये

ஸம்ஸ்கிருத முதற் புத்தகம்

எழுத்துக்களும் அவற்றின் உச்சரிப்பும்

எழுத்துக்களின் உச்சரிப்பானது, வாய்முகமாகத் தெரிந்தவர்பால் கேட்டு உணரத்தக்கது. வடமொழியில் உள்ள ஒலிகள் எல்லாம் தென்மொழியில் இல்லாமையால் ஸம்ஸ்கிருத எழுத்துக்களின் உச்சரிப்பைத் தமிழ் எழுத்துகளின் உதவியாலேயே முற்றிலும் அறிய வொண்ணாது. ஆயினும் இயன்றவண்ணம் கீழ் எழுதப்படும்.

எழுத்துக்கள்

உயிர்கள்

अ, आ, इ, ई, उ, ऊ, ऋ, ॠ, ऌ, ए, ऐ, ओ, औ

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, லு, ஏ, ஐ, ஓ, ஔ

(ऋ, ரு, ம்ருகம்; ऌ, லு, க்லுப்தம்.)

உயிரெழுத்துக்கள் குறில் (ஹ்ரஸ்வம்), நெடில் (தீர்க்கம்) என இருவகைப்படும்.

குறிலாவன:—अ, इ, उ, ऋ, ऌ

நெடிலாவன:—आ, ई, ऊ, ॠ, ए, ऐ, ओ, औ.

மெய்கள்

கண்டஜம் (கவர்க்கப்)—क्, க்$_1$, ख्, க்$_2$, ग्, க்$_3$, घ्, க்$_4$, ङ्, ங்,

தாலுஜம் (சவர்க்கப்)—च्, ச்$_1$, छ्, ச்$_2$, ज्, ஜ்$_1$, झ्, ஜ்$_2$, ञ्, ஞ்,

மூர்த்தஜம் (டவர்க்கம்)—ट्, ட்$_1$, ठ्, ட்$_2$, ड्, ட்$_3$, ढ्, ட்$_4$, ण्, ண்

தந்தஜம் (தவர்க்கம்)—त्, த்$_1$, थ्, த்$_2$, द्, த்$_3$, ध्, த்$_4$, न्, ந்,

ஓஷ்டஜும் (பவர்க்கம்)—प्, ப்$_1$, फ्, ப்$_2$, ब्, ப்$_3$, भ, ப்$_4$, म्, ம்,

அந்தஸ்தங்கள்
- தாலுஜம் य् ய்
- மூர்த்தஜும் र् ர்
- தந்தஜும் ल् ல்
- தந்தோஷ்டஜம் व् வ்

ஊஷ்மாக்கள்
- தாலுஜம் श् ச்$_3$
- மூர்த்தஜம் ष् ஷ்
- தந்தஜம் स् ஸ்

மஹா ப்ராண உச்சார்யவர்ணம் ह् ஹ்

மேல்கூறிய மெய்களின் உச்சரிப்பைக் கீழ் கூறப்போகும் உதாரணங்களினின்று அறிந்துகொள்க.

க$_1$—கால், கை. க$_2$—அகிலம், வெட்கம். க$_3$—கீதம், தங்கம். க$_4$—கோஷம், கோரம். ச$_1$—உச்சி, தச்சன். ச$_2$—சாயை, ஜ்$_1$—ஜானகி, ஜ்வரம், ஜாதி. ஜ்$_4$—ஜடிதி, ஜங்காரம். ச$_3$—சாஸ்திரி, சாகம். ட$_1$—கட்டை. ட$_2$—பீடம், கண்டம். கழுத்து) ட$_3$—மாடு, வீடு. ட$_4$—மூடன், டக்கா. த$_1$—தடை, தட்டை. த$_2$—ரதம், நாதன். த$_3$—தானம், வேதம். த$_4$—தனம், விதி. ப$_1$—பணம், படை. ப$_2$—பலம், ஸ்பூர்த்தி. ப$_3$—பலம் (வலிவு), பாணம். ப$_4$—சுபம், பீமன்.

முற்கூறிய ஐவர்க்கங்களின் ஒவ்வொன்றிலு முள்ள முதல் இரண்டெழுத்துக்களும் ஊஷ்மாக்களும் வன் கண மெய்கள் எனப்படும்.

ஏனைய மெய்கள் மென்கண மெனப்படும்.

ஐவர்க்கங்களின் ஈற்று ஐந்து எழுத்துக்களும் அநுநாசிகங்கள் எனப்படும்.

மேற்கூறிய எழுத்துக்களன்றி அநுஸ்வாரம் விஸர்க்கம் என இரண்டொலிகளுண்டு :—

அநுஸ்வாரம் ं. விஸர்க்கம் ः.

அநுஸ்வாரத்தை எழுத்தின்மேலும் விஸர்க்கத்தை எழுத்தின் பக்கத்திலுங் கூட்டவேண்டும்.

அநுஸ்வாரம் :—ம் உச்சரிப்பைப் போன்றது (உ-ம்) अं, அம் उं, உம் ओं-ஓம்.

விஸர்க்கம் :—இதன் ஒலி ஏறக்குறைய ஹ்இன் ஒலியை ஒத்திருக்கிறது. ஆனால் தன் முன்வரும் உயிருக்குத்தக்கபடி சிறிது பேதப்படுகிறது.

(உ-ம்) अः அஹ, आः ஆஹ, इः இஹி, ईः ஈஹி, उः உஹு, ऊ ஊஹு, एः ஏஹே, ऐः ஐஹி முதலியன.

சமான முயற்சியோடு உச்சரிக்கப்படுவதும், சமான பிறப்பிடத்தையுடையதுமான வெழுத்துக்கள், இனவெழுத்துக்கள் (ஸவர்ணம்) எனப்படும். இனமல்லாத எழுத்துக்கள் அஸவர்ணம் எனப்படும்.

வேறு எழுத்தின் உதவியின்றி உச்சரிக்கப்படும் எழுத்திற்கு ஸ்வரம் அல்லது உயிர் என்றும், உயிரெழுத்தின் உதவியைக்கொண்டே உச்சரிக்கப்படும் எழுத்திற்கு வ்யஞ்சனம் அல்லது மெய் என்றும், பெயராம்.

மெய்யெழுத்துக்களின் இக்குறையைக் காட்டவே அவற்றின் கீழ் ஓர் சாய்ந்த கோடிடப்படுகிறது.

உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களோடு கூடும் பொழுது பின்வருமாறு வடிவமாம் :—

अ காரங் கூடும்போது மெய்யின் கீழிடப்பட்ட சாய்ந்த கோடு நீங்குகிறது. आ, इ, ई, उ, ऊ, ऋ, ॠ, ऌ, ए, ऐ, ओ,

ஔ, என்பவைகள் மெய்களோடு கூடும்பொழுது முறையே ा, ि, ी, ु, ू, ृ, ॄ, ॢ, े, ै, ो, ौ, எனவாகின்றன. உதாரணமாக क् முதலிய மெய்கள் உயிர்களோடு கூடி.

क	का	कि	की	कु	कू	कृ	कॄ	कॢ	के	कै	को	कौ
ख	खा	खि	खी	खु	खू	खृ	खॄ	,,	खे	खै	खो	खौ
ग	गा	गि	गी	गु	गू	गृ	गॄ	,,	गे	गै	गो	गौ
घ	घा	घि	घी	घु	घू	घृ	घॄ	,,	घे	घै	घो	घौ
ङ	ङा	ङि	ङी	ङु	ङू	ङृ	ङॄ	,,	ङे	ङै	ङो	ङौ
च	चा	चि	ची	चु	चू	चृ	चॄ	,,	चे	चै	चो	चौ
छ	छा	छि	छी	छु	छू	छृ	छॄ	,,	छे	छै	छो	छौ
ज	जा	जि	जी	जु	जू	जृ	जॄ	,,	जे	जै	जो	जौ
झ	झा	झि	झी	झु	झू	झृ	झॄ	,,	झे	झै	झो	झौ
ञ	ञा	ञि	ञी	ञु	ञू	ञृ	ञॄ	,,	ञे	ञै	ञो	ञौ
ट	टा	टि	टी	टु	टू	टृ	टॄ	,,	टे	टै	टो	टौ
ठ	ठा	ठि	ठी	ठु	ठू	ठृ	ठॄ	,,	ठे	ठै	ठो	ठौ
ड	डा	डि	डी	डु	डू	डृ	डॄ	,,	डे	डै	डो	डौ
ढ	ढा	ढि	ढी	ढु	ढू	ढृ	ढॄ	,,	ढे	ढै	ढो	ढौ
ण	णा	णि	णी	णु	णू	णृ	णॄ	,,	णे	णै	णो	णौ

त	ता	ति	ती	तु	तू	तृ	तॄ	तॢ	ते	तै	तो	तौ
थ	था	थि	थी	थु	थू	थृ	थॄ	,,	थे	थै	थो	थौ
द	दा	दि	दी	दु	दू	दृ	दॄ	,,	दे	दै	दो	दौ
ध	धा	धि	धी	धु	धू	धृ	धॄ	,,	धे	धै	धो	धौ
न	ना	नि	नी	नु	नू	नृ	नॄ	,,	ने	नै	नो	नौ
प	पा	पि	पी	पु	पू	पृ	पॄ	,,	पे	पै	पो	पौ
फ	फा	फि	फी	फु	फू	फृ	फॄ	,,	फे	फै	फो	फौ
ब	बा	बि	बी	बु	बू	बृ	बॄ	,,	बे	बै	बो	बौ
भ	भा	भि	भी	भु	भू	भृ	भॄ	,,	भे	भै	भो	भौ
म	मा	मि	मी	मु	मू	मृ	मॄ	,,	मे	मै	मो	मौ
य	या	यि	यी	यु	यू	यृ	यॄ	,,	ये	यै	यो	यौ
र	रा	रि	री	रु	रू	रृ	रॄ	,,	रे	रै	रो	रौ
ल	ला	लि	ली	लु	लू	लृ	लॄ	,,	ले	लै	लो	लौ
व	वा	वि	वी	वु	वू	वृ	वॄ	,,	वे	वै	वो	वौ
श	शा	शि	शी	शु	शू	शृ	शॄ	,,	शे	शै	शो	शौ
ष	षा	षि	षी	षु	षू	षृ	षॄ	,,	षे	षै	षो	षौ
स	सा	सि	सी	सु	सू	सृ	सॄ	,,	से	सै	सो	सौ
ह	हा	हि	ही	हु	हू	हृ	हॄ	,,	हे	है	हो	हौ

எனவாகின்றன.

முக்கியமான கூட்டெழுத்துக்களாவன :—

क्क	क्‌क	ङ्ग	ङ्‌ग	ध्न	ध्‌न	व्य	व्‌य
क्त	क्‌त	ङ्य	ङ्‌य	ध्र	ध्‌र	व्र	व्‌र
क्त्व	क्‌त्‌व	ङ्व	ङ्‌व	ध्य	ध्‌य	श्र	श्‌र
क्न	क्‌न	ङ्म	ङ्‌म	ध्व	ध्‌व	श्न	श्‌न
क्म	क्‌म	ढ्य	ढ्‌य	र्ध्व	र्‌ध्‌व	श्य	श्‌य
क्र	क्‌र	ण्ण	ण्‌ण	न्न	न्‌न	श्ल	श्‌ल
क्य	क्‌य	ण्म	ण्‌म	न्य	न्‌य	श्व	श्‌व
क्ल	क्‌ल	ण्य	ण्‌य	न्व	न्‌व	श्म	श्‌म
क्व	क्‌व	र्ण्य	र्‌ण्‌य	न्म	न्‌म	श्च	श्‌च
क्ष	क्‌ष	ण्व	ण्‌व	प्त	प्‌त	ष्क	ष्‌क
क्ष्य	क्‌ष्‌य	त्त	त्‌त	प्स्य	प्‌स्‌य	ष्क्र	ष्‌क्‌र
क्ष्व	क्‌ष्‌व	त्य	त्‌य	प्स	प्‌स	ष्ट	ष्‌ट
क्ष्म	क्‌ष्‌म	त्व	त्‌व	प्न	प्‌न	ष्ट्र	ष्‌ट्‌र
क्ष्ण	क्‌ष्‌ण	त्म	त्‌म	प्य	प्‌य	ष्ट्व	ष्‌ट्‌व
ख्य	ख्‌य	त्स्य	त्‌स्‌य	प्म	प्‌म	ष्ट्य	ष्‌ट्‌य
ग्ध	ग्‌ध	त्र	त्‌र	प्ल	प्‌ल	ष्ठ	ष्‌ठ
ग्न	ग्‌न	त्प्र	त्‌प्‌र	प्र	प्‌र	ष्ठ्य	ष्‌ठ्‌य
ग्र	ग्‌र	त्न	त्‌न	ब्ध	ब्‌ध	ष्प	ष्‌प
ग्र्य	ग्‌र्‌य	त्प	त्‌प	ब्ज	ब्‌ज	ष्ण	ष्‌ण
ग्ल	ग्‌ल	त्स	त्‌स	ब्द	ब्‌द	ष्म	ष्‌म

ग्व	ग्‌व	त्र्य	त्‌र्‌य	व्र	व्‌र	प्प्र	प्‌प्‌र
घ्य	घ्‌य	त्फ	त्‌फ	व्य	व्‌य	प्य	प्‌य
घ्र	घ्‌र	त्थ	त्‌थ	भ्य	भ्‌य	प्व	प्‌व
घ्व	घ्‌व	त्स्न	त्‌स्‌न	भ्र	भ्‌र	स्क	स्‌क
घ्न	घ्‌न	त्त्र	त्‌त्‌र	भ्ण	भ्‌ण	स्ख	स्‌ख
ङ्क	ङ्‌क	थ्य	थ्‌य	भ्व	भ्‌व	स्त	स्‌त
ङ्क्त	ङ्‌क्‌त	द्ग	द्‌ग	भ्न	भ्‌न	स्म	स्‌म
च्य	च्‌य	द्व	द्‌व	म्र	म्‌र	स्थ	स्‌थ
च्च	च्‌च	द्य	द्‌य	म्य	म्‌य	स्र	स्‌र
च्छ	च्‌छ	द्द	द्‌द	म्ल	म्‌ल	स्न	स्‌न
च्छ्व	च्‌छ्‌व	द्ध	द्‌ध	म्व	म्‌व	स्प्र	स्‌प्‌र
च्म	च्‌म	द्र्य	द्‌र्‌य	म्म	म्‌म	स्फ	स्‌फ
च्छ्र	च्‌छ्‌र	द्ब	द्‌ब	य्व	य्‌व	स्य	स्‌य
ज्ज	ज्‌ज	द्व्र	द्‌व्‌र	ल्क	ल्‌क	ह्ण	ह्‌ण
ज्र	ज्‌र	द्व्य	द्‌व्‌य	ल्ग	ल्‌ग	ह्म	ह्‌म
ज्व	ज्‌व	द्र	द्‌र	ल्य	ल्‌य	ह्न	ह्‌न
ट्ट	ट्‌ट	द्म	द्‌म	ल्प	ल्‌प	ह्य	ह्‌य
ट्य	ट्‌य	द्भ	द्‌भ	ल्म	ल्‌म	ह्र	ह्‌र
ठ्र	ठ्‌र	द्व्र	द्‌व्‌र	ल्व	ल्‌व	ह्व	ह्‌व
ठ्य	ठ्‌य	ध्म	ध्‌म	ल्ल	ल्‌ल	ह्ल	ह्‌ल

கூட்டெழுத்துக்களின் உச்சரிப்பு :—இவைகளை உச்சரிக்கும்போது கூட்டெழுத்திலுள்ள உயிரெழுத்துக்களையும் மெய்

யெழுத்துக்களையும் செவ்வையாய்ப் பகுத்தறிந்து கடைசி மெய்யின்மேல் உயிரை ஏற்றியும் மற்ற மெய்களை ஒற்றாகவும் கொண்டு உச்சரிக்கவேண்டும். (உ-ம்) க்த்வா க், த், வா.

சொல்லுச்சரிப்பு :—வடமொழி, தென்மொழி, ஆந்திரம், கன்னடம் முதலிய பாஷைகளில் இன்ன எழுத்திற்கு, இன்ன ஒலி என்று ஏற்பட்டுள்ளது. எழுத்தின் உச்சரிப்பு எங்கும் மாறுவதில்லை. ஆங்கிலம்போன்ற பாஷைகளிலோ இத்தகைய நியமம் இன்று. ஒரு எழுத்தே அநேக ஒலிகளை உணர்த்தவேண்டியிருக்கிறது. ஆதலின் சொற்கள்தோறும் ஒரு எழுத்தின் உச்சரிப்பு பேதப்படும். ஆகவே இவ்வடமொழியில் எழுத்து உச்சரிப்பு அறிந்தோர்க்குச் சொல்லுச்சரிப்பு எளிது. எழுத்துக்களைச் சரியாய் உச்சரிக்க அவற்றால் ஆக்கப்பட்ட சொல்லும் தானே உச்சரிக்கப்பட்டதாகும்.

முதற் பாடம்

வினைகள்

பரஸ்மை பதம்*—நிகழ் காலம்

ஒருமை விகுதிகள்

தன்மை मि, முன்னிலை सि, படர்க்கை ति.

முதற் கண தாதுக்கள்

गम् [गच्छ्†] போ बुध् (बोध्) அறி वद् பேசு

---

* வடமொழியில் பரஸ்மைபதம் ஆத்மனே பதம் என விருவகை விகுதிகளுள்ளன. சில தாதுக்கள் முன்னதை மாத்திரமும் வேறு சில பின்னதை மாத்திரமு மற்றுஞ் சில இரண்டையு மேற்றுக்கொள்ளுகின்றன.

† விகரணங்கூடும்போது சில தாதுக்களடையும் வேறு ரூபங்கள் [ ] இம்மாதிரி அடையாளத்துட் காட்டப்பட்டிருக்கின்றன.

नी (नय् ‡) நடத்து	भू (भव्) இரு, ஆகு	वस् வசி
पत् விழு	रक्ष् இரட்சி, காப்பாற்று	सृ (सर्) நகர், ஊர்.

* இரண்டாங் கணத் தாதுக்கள்—अस् இரு, अद् உண், புசி. விகுதிகளைச் சேர்க்குமுன் முதற் கண வினைப் பகுதிகளோடு அகரங் கூட்டப்படுகிறது. இம்மாதிரி கூட்டப்படும் எழுத்திற்கு விகரணமெனப் பெயர்.

இரண்டாங் கணத்தில் விகுதிகள் நேரே கூட்டப்படுகின்றன.

म्, व् என்பவைகளை முதலிலுடைய தன்மை விகுதிகள் வரின் நிலைமொழியிற்று அகர நீளும்.

वदामि । वोधसि । सरामि । वोधामि ।

---

‡ முதற்கணத்தின் விகரணமாகிய अ கரம்வரின் (கீழே பார்க்க) தாதுக்களின் ஈற்று உயிர் அல்லது ஈற்றிற்கு அயல் குற்றுயிர் குணமாக மாறும். इகர ईகாரங்கட்கு ए யும், उகர ऊகாரங்கட்கு ओ உம், ऋகர ॠகாரங்கட்கு अर् உம், ऌ உக்கு अल् உம், குணமாம்.

உதாரணமாக नी என்பது அகரம்வர ने என வாகின்றது; இதோடு அகரத்தைக்கூட்டிப் பிறகு படர்க்கையில் ति என்னும் விகுதியைக் கூட்டவும். வடமொழியில் இரண்டு உயிர்கள் அடுத்துவரின் புணராமல் இரா. ஈண்டு கவனிக்கத்தக்கப் புணர்ச்சி விதியாவது:—நிலைமொழி ஈற்று ए, ओ, ऐ, औ, என்பவைகள் உயிர்வரின் முறையே अय्, अव्, आय्, आव्, என மாறுகின்றன. ஆகவே ने+अ=नय्+अ=नय இது ति யோடு கூடி नयति என முடிகிறது. இப்படியே भू+अ+ति=भो+अ+ति=भव्+अ+ति=भवति. இம்மாதிரி உயிர் திரிபால் தாதுக்கள் அடையும் ரூபங்கள் ( ) இம்மாதிரி அடையாளங்களில் காட்டியிருக்கின்றன.

* இரண்டாவது கண தாதுக்களின் ரூபகாரணம் மிகக் கடினமானதுபற்றி இப்புத்தகத்தில் இரண்டே தாதுக்கள் கூறப்பட்டுள.

रक्षसि ।	सरसि ।	गच्छति ।	अत्ति † ।
पतति ।	नयामि ।	अग्नि ।	अस्ति ।
भवति ।	वससि ।	नयति ।	रक्षामि ।

முதற் கணம்

चर् போ, நட	दह् எரி	पच् சமை, அடு
जीव् உயிரோடிரு	नम् வணங்கு	त्यज् தள்ளு
பேசுகிறாய்	வசிக்கிறான்	நகருகிறான்
பேசுகிறான்	விழுகிறாய்	ஆகிறேன்
போகிறாய்	நடக்கிறாய்	உண்கிறாய்
போகிறேன்	அறிகிறான்	இருக்கிறேன்
வசிக்கிறேன்	நடத்துகிறாய்	இருக்கிறாய்*
உயிரோடிருக்கிறேன்	தள்ளுகிறான்	எரிக்கிறாய்
சமைக்கிறான்	வணங்குகிறாய்	சமைக்கிறேன்

இரண்டாம் பாடம்

பன்மை விகுதிகள்

தன்மை मस्, முன்னிலை थ, படர்க்கை † अन्ति

நாம், நாங்கள் நாதுங்கள். ஆறுங்கள் நாதுங்கள்.

नश् அழி	इष [इच्छ्] விரும்பு
नृत् ஆடு	प्रच्छ् [पृच्छ्] கேள்

† வல்லின மெய்வரின் நிலைமொழியீற்று அனுநாஸிகை நீங்கிய, மெய்கள் தம் தம் வர்க்கத்தின் முதலெழுத்தாக மாறுகின்றன. உதாரணமாக ककुभ् + प्रान्त = ककुप्प्रान्त ; दृषद् + पतति = दृषत्पतति.

* सि விகுதிவரின் अस् தாதுவின் ஈறுகெடும்.

‡ அ காரத்தை முதலிலுடைய விகுதி வரின் நிலைமொழி ஈற்று அ காரங்கெடும்.

पुष् போஷி	मुच् [मुञ्च्] விடு
मुह् மோஹமடை, மயங்கு	विश् நுழை
लुभ् பேராசைப்படு	सृज् விடு, படை
अस् எறி	स्पृश् தொடு
कुस् தழுவு	
लुट् புரளு	

விகுதிகளைக் கூட்டு முன், தாதுக்களோடு நான்காங் கணத்தில் யகரமும், ஆறுங்கணத்தில் அகரமுங் கூட்டப்படுகின்றன; இந்தக் கணங்களில் முதற் கணத்திற் போல் உயிர்கள் குணமாக மாறுகிறதில்லை.

பன்மை இருமை விகுதிகள் வரின், இரண்டாங் கண अस् தாதுவின் அகரங்கெடும்.

वदामः ।*	स्थ ।	पुष्यामः ।	सृजथ ।
गच्छन्ति ।	अदन्ति ।	नश्यन्ति ।	इच्छन्ति ।
बोधथ ।	दहामः ।	नृत्यथ ।	पृच्छथ ।
नयामः ।	सन्ति ।	मुह्यामः ।	मुञ्चामः ।
भवथ ।	जीवथ ।	लुभ्यन्ति ।	विशन्ति ।
वसन्ति ।	नमन्ति ।	स्पृशामः ।	अस्यथ ।

முதற் கண தாதுக்கள்

जि (जय्) ஜயமடை	पा [पिब्] குடி
दृश् [पश्य्] பார்	वह् தாங்கு, எடுத்துச்செல், ஓடு

* மொழிகளின் இறுதியிலுள்ள स् வேறேழுத்தாற்றொடரப் படினும் தனித்து நிற்பினும் விசர்க்கமாக மாறும்; இப்படியே ஈற்று र् உம் வன்கணத்தாற் றொடரப்படினும் தனித்து நிற்பினும் விஸர்க்கமாக மாறும்.

धाव् ஓடு

यज् யாகஞ் செய்

स्मृ (स्मर्) நினைவு கூர்

हृ (हर्) எடு, கொண்டுபோ

ஆறாங் கண தாதுக்கள்

क्षिप् எறி

तुद् பிடி

दिश् காட்டு

सिच् [सिञ्च्] தெளி

பேசுகிறீர்கள்	ஜீவிக்கிறீர்கள்	எறிகிறோம்
போகிறோம்	போஷிக்கிறீர்கள்	குடிக்கிறோம்
அறிகிறார்கள்	ஆடுகிறார்கள்	யாகஞ்செய்கிறீர்கள்
நடக்கிறீர்கள்	அழிகிறோம்	தாங்குகிறார்கள்
ஆகிறார்கள்	மோகிக்கிறீர்கள்	நினைவுகூருகிறோம்
வசிக்கிறோம்	பேராசைப்படுகிறோம்	புசளுகிறீர்கள்
புசிக்கிறீர்கள்		எறிகிறீர்கள்
இருக்கிறோம்	தொடுகிறார்கள்	கொண்டுபோகிறார்கள்
எரிக்கிறார்கள்	ஜெயமடைகிறோம்	தெளிக்கிறீர்கள்
ஜீவிக்கிறோம்	பார்க்கிறார்கள்	குடிக்கின்றன
பிடிக்கிறார்கள்		

மூன்றாம் பாடம்

இருமை விகுதிகள்

தன்மை वस्, முன்னிலை थस्, படர்க்கை तस्

பத்தாங் கண தாதுக்கள் †

कथ् சொல்லு

गण् எண்ணு, கணி

प्रथ् பிரசுரி, பிரசித்தம் பண்ணு

प्री [प्रीण्] இன்புறுத்து

† பத்தாங் கண தாதுக்கள் பொதுவாக உபயபதிகளாம்.

घुष् (घोष्) கோஷி
चिन्त् சிந்தி
चुर् (चोर्) திருடு
पीड् பீடி

रच् ஒழுங்காக்கு, அடுக்கு, வரிசைப்படுத்து
स्पृह् இச்சி

பத்தாங் கண தாதுக்களோடு விகுதிகளைக் கூட்டு முன் अय விகரணத்தைக் கூட்டவேண்டும்.

चोरयावः ।	अद्वः ।	गच्छतः ।	स्मरावः ।
पीडयथः ।	घोषयथः ।	नयावः ।	जयथः ।
कथयथः ।	स्पृहयावः ।	विशतः ।	नश्यतः ।
गणयावः ।	चिन्तयथः ।	नमतः ।	नृत्यावः ।
प्रथयावः ।	प्रीणयतः ।	स्थः ।	इच्छतः ।
रचयतः ।			

முதற் கணம்	நான்காங் கணம்	ஆறுங் கணம்
अट् திரி, அலை	तुष् சந்தோஷப்படு	उञ्छ् பொறுக்கு
चल् அசை, போ	शुष् வற்று	कृष् உழு
जल्प् பிதற்று	कुप् கோபங்கொள்	स्फुर् துடி

* कथ्, गण्, रच्, प्रथ् முதலிய சில தாதுக்கள் தவிர மற்ற தாதுக்களின் ஈற்றிற்கயல் அகாரமும், ஈற்று உயிரும், अय வரின் விருத்தியாக மாறுகின்றது. அகரத்திற்கு ஆகாரமும், இகர ஈகாரங்கட்கு ஐகாரமும் உகர ஊகாரங்கட்கு ஔகாரமும், ருகர ரூகாரங்கட்கு आर् உம், ऌ உக்கு आल् உம், விருத்தியாம். स्पृह्, मृग्, முதலிய சில தாதுக்கள் தவிர மற்ற தாதுக்களின் ஈற்றிற் கயல் குறில் குணமாக மாறுகின்றது. உ-ம் चि+अय=चै+अय=चाय्+अय=(சந்தி விகாரம் பக்கம் 9, ‡ இக்குறியைப் பார்க்க) चाययति. तड्+अय=ताड्+अय+ति=ताडयति ; घुष्+अय=घोष्+अय+ति=घोषयति.

निन्द् நிந்தி	क्षुभ् கலங்கு
शंस् புகழ், துதி	श्लिष् தழுவு

பத்தாங் கணம்

पूज् பூஜி, चर्ण् வர்ணி, सान्त्व् சாந்தப்படுத்து

(இருவர்)	திருடுகிறீர்கள்	(இருவர்)	தழுவுகிறோம்
,,	பீடிக்கிறார்கள்	,,	பிதற்றுகிறீர்கள்
,,	சொல்லுகிறோம்	,,	புகழ்கிறோம்
,,	எண்ணுகிறீர்கள்	,,	பேசுகிறீர்கள்
,,	பார்க்கிறார்கள்	,,	ஆகிறார்கள்
,,	அடுக்குகிறோம்	,,	சமைக்கிறீர்கள்
,,	இச்சிக்கிறீர்கள்	,,	அறிகிறோம்
,,	கோஷிக்கிறார்கள்	,,	புசிக்கிறார்கள்
,,	சிந்திக்கிறோம்	,,	சந்தோஷப்படுகிறோம்
,,	பிரசுரிக்கிறீர்கள்		
,,	நிந்திக்கிறீர்கள்	,,	பேராசைப்படுகிறீர்கள்
,,	கோபிக்கிறீர்கள்		
,,	உழுகிறார்கள்	,,	புரள்கிறார்கள்
,,	திரிகிறீர்கள்	,,	தொடுகிறோம்
,,	கலங்குகிறீர்கள்	,,	கேட்கிறீர்கள்
,,	பொறுக்குகிறோம்	,,	சாந்தப்படுத்துகிறார்கள்
,,	வர்ணிக்கிறார்கள்		

நான்காம் பாடம்

நிகழ் காலம்

முதற் கணம்.	நான்காங் கணம்.	பத்தாங் கணம்.
क्षि (क्षय्) குறை	मद् [माद्] மதங்கொள், தவறு	क्षल् (क्षाल्) கழுவு
द्रु (द्रव) இளகு, ஈரமாகு		तड् (ताड्) அடி

रुह् (रोह्) வளர் — शम [शाम्] சாந்தமடை — तुल् (तोल्) நிறு

स्था [तिष्ठ्] நில் — श्रम् [श्राम्] களைப்படை — भूष् அலங்கரி

ह्वे (ह्वय्) கூப்பிடு, அழை

वदासि ।	इच्छामि ।	रोहन्ति ।	जयसि ।
वसथ ।	मुञ्चथ ।	पूजयति ।	पिवन्ति ।
वोधामः ।	स्पृशति ।	तिष्ठामि ।	पश्यावः ।
रक्षसि ।	स्मरथ ।	स्पृहयथ ।	ह्वयति ।
पतामि ।	वहतः ।	क्षालयति ।	पीडयन्ति ।
नयन्ति ।	सिञ्चति ।	क्षयतः ।	जयामः ।
अत्थः ।	लुटयन्ति ।	अत्सि ।	श्राम्यामि ।
सन्ति ।	तुष्यामि ।	जीवामः ।	घोषयथ ।
नश्यसि ।	अस्यथः ।	त्यजथ ।	गणयति ।
नृत्यति ।	कथयामि ।	पचन्ति ।	कुपामः ।
विशामः ।	शंसथ ।	पुष्यामि ।	द्रवन्ति ।
पृच्छतः ।	ताडयसि ।	हरतः ।	चिन्तयति ।
मुह्यन्ति ।			

போஷிக்கிறான்
நுழைகிறான்
பிடிக்கிறாய்
இச்சிக்கிறாய்
வளருகிறது
ஆசைப்படுகிறாய்
களைப்படைகிறாய்
இச்சிக்கிறேன்
தறிக்கிறீர்கள்
கழுவுகிறார்கள்
குறைகிறது
சொல்லுகிறாய்

வணங்குகிறேன்
கூப்பிடுகிறோம்
மோகமடைகிறான்
திருப்தியடைகிறான்
ஜெயிக்கிறேன்
போகிறீர்கள்
எடுக்கிறோம்
சொல்லுகிறீர்கள்
கொடுகிறாய்
இச்சிக்கிறீர்கள்
இருவர்போகிறீர்கள்
திருடுகிறான்
இருவர் இருக்கிறோம்

நிறுக்கிறாய்
திருடுகிறார்கள்
ஒழுங்காக்குகிறீர்கள்
கோஷிக்கிறான்
ஸ்மரிக்கிறேன்
இருவர்வசிக்கிறார்கள்
இன்புறுத்துகிறாய்
நுழைகிறேன்
அடிக்கிறார்கள்
இருவர்சமைக்கிறோம்
பூஜிக்கிறீர்கள்
இருவர்திருடுகிறோம்

பரஸ்மைபத நிகழ்கால ரூபகரண உதாரணங்கள்

முதற் கணம்

	ஒருமை	இருமை	பன்மை
தன்மை	भवामि	भवावः	भवामः
முன்னிலை	भवसि	भवथः	भवथ
படர்க்கை	भवति	भवतः	भवन्ति

நான்காம் கணம்

தன்மை	कुप्यामि	कुप्यावः	कुप्यामः
முன்னிலை	कुप्यसि	कुप्यथः	कुप्यथ
படர்க்கை	कुप्यति	कुप्यतः	कुप्यन्ति

ஆறாம் கணம்

தன்மை	तुदामि	तुदावः	तुदामः

முன்னிலை	तुदसि	तुदथः	तुदथ
படர்க்கை	तुदति	तुदतः	तुदन्ति

பத்தாங் கணம்

தன்மை	चोरयामि	चोरयावः	चोरयामः
முன்னிலை	चोरयसि	चोरयथः	चोरयथ
படர்க்கை	चोरयति	चोरयतः	चोरयन्ति

பரீக்ஷை வினுக்கள்

---

1. பின் வருபவைகள் எவை?

1. கண்டத்தில் தோற்றுவன
2. தாலுவில் தோற்றுவன
3. மூர்த்தாவில் தோற்றுவன
4. தந்தத்தில் தோற்றுவன
5. ஓஷ்டத்தில் தோற்றுவன
6. அந்தஸ்தங்கள்
7. அனுநாசிகங்கள்
8. வன்கண மெய்கள்
9. மென்கண மெய்கள்
10. ஊஷ்மாக்கள்

2. பின்வரும் எழுத்துக்களின் குணவிருத்திகளைக் கூறுக
   इ, उ, ऋ, ऌ.
3. பின்வரும் கணங்களின் விகரணங்கள் எவை?
   1—4—6—10.
4. நிகழ்கால விகுதிகளைக் கூறுக.
5. தன்மை விகுதியின் म्, व् என்பவை வரின் நிலைமொழியீற்று अகரம் எவ்வாறாம்?
6. நிலைமொழியீற்று ए, ओ, ऐ, औ என்பவைகள் வருமொழி முதலில் உயிர்வரின் எவ்வாறாம்? உதாகரிக்க.

7. நிலைமொழியீற்று மெய்யும் வருமொழிமுதல் வன்கணமெய்யும் எவ்வாறு புணரும்? உதாரணங் காட்டுக.

8. ஈற்று स्ம், र्ம் எப்பொழுது எவ்வாறு மாறும்?

9. பின்வருந் தாதுக்களின் நிகழ்கால ரூபங்களைக் கூறுக.

क्षुध्, गम्, तड्, क्षल्, तुष्, पुष्, मुच्, विश्, तुल्.

உபஸர்க்கம்

மூன்று லிங்கங் (பால்) களிலும் எட்டு வேற்றுமை (விபக்தி) களிலும் மூன்று எண்களிலும் எது மாறுபடுகிறதில்லையோ அத்தகைய சொல் அவ்யய மெனப்படும். அவ்யயம் அநேக வகைப்படும். அவற்றுள் உபஸர்க்கம் ஒன்று.

உபஸர்க்கத்திற்குத் தனியாகப் பொருளுண்டு. தாதுவிற்குப் பூர்வம் சேர்க்கப்படின் அத் தாதுவின் பொருளை வேறுபடுத்தும். சில உபஸர்க்கங்கள் தாதுவின் பொருளை பாதிக்கும், சில வற்புறுத்தும், சில மாற்றும். இங்கு சில முக்கியமான உபஸர்க்கங்கள் கூறப்படுகின்றன.

अति மேல், அப்பால்; अतिक्रामति அப்பால் போகிறான், கடக்கிறான்.

अधि மேல்; अधिगच्छति அறிகிறான், அடைகிறான்.

अनु பின், போல; अनुसरति, अनुगच्छति பின்பற்றுகிறான்.

अभि சமீபம்; अभिगच्छति கிட்டப்போகிறான்.

अव கீழே; अवतरति இறங்குகிறான்.

आ எல்லையைக் குறிப்பது; आगच्छति திரும்புகிறான்.

उद् மேலே; उत्पतति மேலே எழும்புகிறான், பாய்கிறது.

उप சமீபம்; उपगच्छति அணுகுகிறான்.

नि கீழே; निषीदति கீழே உட்காருகிறான்.

परा எதிர்மறைப்பொருளில்; पराजयते தோல்வியடைகிறான்.
प्रति மறுபடி; प्रतिभाषते பதில் பேசுகிறான்.
प्र முன்; प्रयाति புறப்படுகிறான்.
वि பிரிவுப்பொருளது; विश्लिष्यति பிரிகிறான்.
सम् சேர்க்கை; संगच्छते * கூடுகிறான்.

சிலசமயங்களில் இரண்டு அல்லது அதிக உபஸர்க்கங்கள் சேர்ந்து தாதுவிற்குப் பூர்வம் வரும்.

உதாரணம் उपनिषीदति, समुपागच्छति.

ஐந்தாம் பாடம்

[சுபந்தங் (பெயர்ச்சொற்) களுக்கு எழு விபக்தி (வேற்றுமை) களுண்டு. ஒவ்வொரு வேற்றுமைக்கும் மூன்று வசனங்களுண்டு. விபக்திகள் சேரப் பெறும் பெயரடிகளுக்கு பிராதிபதிகங்கள் என்று பெயராம். இந்தப் பிராதிபதிகங்களிற் சில अजन्तங்க (உயிரீறுக) ளாகவும் சில हलन्त (மெய்யீறு) களாகவும் இருக்கும். இவ்விருவகை பிராதிபதிகங்களுள்ளும் சில மூன்று லிங்கங்களிலும், சில இரண்டு லிங்கங்களிலும், சில ஒரே லிங்கத்திலும் வரும். லிங்கங்கள் पुम्, स्त्री, नपुंसकं என மூன்றாம். வடமொழியில் லிங்க பேதத்தைச் சொல்லின் அந்தத்தைக்கொண்டே யறியவேண்டுமேயன்றி தமிழிற்போல் திணையைக் கொண்டல்ல.]

* ஒரு பதம் அல்லது உபஸர்க்கத்தின் ஈற்றிலுள்ள म्, மெய்வரின் அனுஸ்வாரமாதலும் ஆகும். ஆனால் श्, ष्, स्, र्, ह्, வரின் நியதியாய் அனுஸ்வாரமாகும், அநுஸ்வாரமாகாதபோது வரும் மெய்யின் அநுநாஸிகமாகும், य्, व्, ल्, வரின் முறையே அவற்றின் அநுநாஸிகமாகும்.

முதல் வேற்றுமை.

1. அகாரவீற்றுப் பெயர்ச் சொற்கள்

உருபுகள்

	ஒருமை	இருமை	பன்மை
புல்லிங்கம்	स	औ*	अस्
நபும்ஸக லிங்கம்	म्	ई	आनि
रामः இராமன்		रामौ* இரண்டு இராமர்கள்	रामाः† வெகு இராமர்கள்
	फलम्	फले‡	फलानि

புல்லிங்கப் பெயர்ச் சொற்கள்

अनल நெருப்பு	नर மனிதன்	मूर्ख மூடன்
अश्व குதிரை	नृप அரசன்	मेघ மேகம்
ईश्वर கடவுள்	पवन காற்று	राम ஓர் மனிதன்

---

* அகர அல்லது ஆகாரத்திற்கு முன் ஏகாரம் அல்லது ஐகாரம் வரின் இரண்டுங்கெட ஓர் ஐகாரமும், ஓகாரம் அல்லது ஔகாரம் வரின் ஓர் ஔகாரமும் தோன்றும். कृष्ण+एकत्वम्=कृष्णैकत्वम्, गंगा+ओघः=गंगौघः

† கடை நான்கு உயிர்கள் (ए, ऐ, ओ, औ) தவிர மற்றவை குறிலாயினும் நெடிலாயினும் தம் முன் தாம் வரின் இரண்டுங் கெட ஓர் நெடில் தோன்றும். राम+अरि=रामारि ; कवि+ईश=कवीश. 10-ம் பக்கம் †இக் குறியிற் கண்ட விதி, முதல் இரண்டாம் வேற்றுமைகளில் இசையாது.

‡ அகர அல்லது ஆகாரத்திற்கு முன் इ, उ, ऋ, ऌ குறிலாயினும் நெடிலாயினும் வரின் இரண்டுங் கெட ஏற்றதோர் குணவெழுத்து தோன்றும்.

कूर्म ஆமை	पुत्र புத்திரன்	वृक्ष மரம்
जन ஜனம்,மனிதன்	बाल குழந்தை	समुद्र சமுத்திரம்
जीव பிராணன், பிராணி	बुध புத்திமான்	सूद பரிசாரகன்
	ब्राह्मण பிராமணன்	हस्त கை

நபும்ஸக லிங்கப் பெயர்ச் சொற்கள்

कमल தாமரை	धन தனம்	मित्र தோழன்
गृह வீடு	नेत्र கண்	मुख வாய்
जल நீர்	पर्ण இலை	सुख சுகம்
दुःख துக்கம்	फल பழம்	हृदय இருதயம்

வாக்கியங்கள்

नृपो* जयति । अश्वा†वुत्पततः । जना‡वदन्ति ।

बालः स्पृहयति । हस्तौ हरतः । फले पततः ।

गृहाणि¶ रक्षन्ति । मुखानि द्रवन्ति । धनं नश्यति ।

---

* அகரத்திற்கு முன்னுள்ள விஸர்க்கம், அகரம் அல்லது மென் கணம்வரின் உகரமாகமாறும்; இந்த உகரமானது (20-ம் பக்கம் ‡ விதிப்படி) அகரத்தோடு சேர்ந்து ओ எனவாகும்.

† 9-ம் பக்கம் ‡ புணர்ச்சி விதியைப் பார்க்க.

‡ आகாரத்திற்கு முன்னுள்ள விஸர்க்கமானது உயிர் அல்லது மென்கணம்வரின் கெடும். अகரத்திற்கு முன்னுள்ள விஸர்க்கமும் अகரமல்லாத வினைய வுயிர்வரின் கெடும்; இப்படி விஸர்க்கக் கேட்டால் நெருங்கின இரண்டுயிர்களும் புணர்கிறதில்லை. உதாரணம்— नराः+इमे=नराइमे ; बुधः+इच्छति बुधइच्छति.

¶ ஒரேபதத்தில் ऋ, र्, அல்லது ष् என்பவற்றிற்கு முன் வரும் न् ஆனது, ण् ஆகிறது; இம் மூன்றெழுத்திற்கும் न् க்கும் இடையே உயிர், (ल् நீங்கிய) அந்தஸ்தம், ह् அல்லது क வர்க்க प வர்க்க மெய் வரினும் மேற்கூறிய விகாரமாம். ஆனால் न् ஆனது பதத்தின் ஈற்றிலின் இந்த விகார நேராது உ-ம் नरान्

नेत्रे पश्यतः ।	दुःखं पीडयति ।	नरा गच्छन्ति ।
मेघः सिञ्चति ।	रामः पूजयति ।	कमले नृत्यतः ।
बुधौ मुञ्चतः ।	पुत्रौ तुष्यतः ।	मित्राणि कथयन्ति ।
पवनो हरति ।	जलं शुष्यति ।	सूदो विशति ।
सुखं प्रीणयति ।	मूर्खौ कुप्यतः ।	समुद्रः शाम्यति ।
जीवो मुह्यति ।	कूर्मः सरति ।	

அரசர்கள் இரக்ஷிக்கிறார்கள்
இரண்டு குழந்தைகள் புரளு
[கின்றன
புத்திரன் இன்புறுத்துகிறான்
குதிரைகள் பாய்கின்றன
காற்றுகள் கொண்டுபோகின்
[றன
கடவுள் சிருஷ்டிக்கிறார்
மரங்கள் வளருகின்றன
இரண்டு ஆடைகள் நனைகின்
[றன
இருதயம் திருப்தியாயிருக்
[கிறது
பரிசாரகர் சமைக்கிறார்கள்
ஜனங்கள் நிந்திக்கிறார்கள்

பிராணிகள் நாசமடைகின்
[றன
கை எறிகிறது
கண் துடிக்கிறது
இரண்டு சமுத்திரங்கள் கலங்
[குகின்றன
புத்திமான் சாந்தமாயிருக்கி
[றான்
மூர்க்கர்கள் பிதற்றுகிறார்கள்
மித்திரன் கேட்கிறான்
இலைகள் விழுகின்றன
மனிதன் சொல்லுகிறான்
தாமரை அலங்கரிக்கிறது
வாய் பேசுகிறது
அரசர் ஜயிக்கிறார்கள்

---

† 10-ம் பக்கம் *விதியைப் பார்க்க.

2. இகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள்

உருபுகள்

	ஒருமை	இருமை	பன்மை
புல்லிங்கம்	स्	( )	अस्

இருமையில் ஈற்று இகரம் நீளும்; பன்மையில் अस् உருபுவரின் இகரங் குணமாகும்.

हरिः	हरी	(हरे+अस्=) हरयः

நபும்ஸகம் ( )	ई	इ

உயிர்முதல் உருபுகளைக்கூட்டு முன் நபும்ஸகலிங்க இகர ஈற்றுச் சொற்களோடு न् கூட்டப்படுகிறது. முதல் இரண்டாம் வேற்றுமைகளின் பன்மை உருபுகள்வரின் ஈற்று இகரம் நீளும்.

वारि	वारिणी	वारीणि

புல்லிங்கப் பெயர்ச் சொற்கள்

अग्नि நெருப்பு	कवि கவி	पाणि கை
अरि சத்துரு	गिरि மலை	यति சன்னியாசி
असि கத்தி	धूर्जटि சிவன்	व्याधि நோய்
उदधि சமுத்திரம்	नृपति அரசன்	हरि இந்திரன், ஒர்
ऋषि இருடி	पवि வஜ்ராயுதம், இடி	மனிதன்
कपि குரங்கு	पुरुष மனிதன்	

वारि ந. நீர். न (அவ்யயம்.) இல்லை.

उदधिः क्षुभ्यति । नृपति*र्यजति । गिरिर्वहति ।
कपयः क्षिपन्ति । वारीणि शुष्यन्ति । व्याधयो नश्यन्ति ।

---

* அகர ஆகாரமல்லாத உயிர்களுக்கு முன்னுள்ள ஈற்று स् அல்லது விஸர்க்கம் உயிர் அல்லது மென்கணம் வரின் र् எனத்திரியும்.

ऋषी चिन्तयतः । अग्निर्दहति । पत्रिः पतति ।
अरिः पीडयति । कवयः शंसन्ति । असयः पतन्ति ।
पाणी हरतः । वारि नास्ति । यती चिन्तयतः ।

† சிவன் இரக்ஷிக்கிறான் | நோய் பீடிக்கிறது
‡ ரிஷிகள் சாந்தமாயிருக்கி[றார்கள் | யதிகள் இச்சிக்கிறதில்லை
இரண்டு சத்துருக்கள் ஜயமடை[கிறார்கள்
குரங்குகள் ஓடுகின்றன
கவி வர்ணிக்கிறான் | ஹரி கோபமடைகிறான்
அரசர்கள் நடக்கிறார்கள் | கை தெளிக்கிறது
இரண்டு செருப்புகள் சாந்த[மாகின்றன | மலை ¶ நிற்கிறது

ஆறாம் பாடம்

இரண்டாம் வேற்றுமை

1. அகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள்

உருபுகள்

	ஒருமை	இருமை	பன்மை
புல்லிங்கம்	स	औ	आन्

† र् க்குமுன் र् வரின் முதல் र् கெட முந்திய உயிர் (ऋ தவிர) குறிலாயின் நீளும்.

‡ விஸர்க்கமானது श्, ष्, அல்லது स् வரின் இயல்பாம் அல்லது வரும் எழுத்தாகத் திரியும்.

¶ விஸர்க்கமானது च அல்லது छ வரின் श् எனவும், त அல்லது थ வரின் स् எனவும், ट அல்லது ठ வரின் ष् எனவும் திரியும். உ-ம் हरिः+चरति=हरिश्चरति ; रामस्तरति ; रामष्टीकते.

रामस् இராமனை   रामौ இரண்டு இராமர்களை   रामान् வெகு இராமர்களை

நபும்ஸக லிங்கம்-முதல் வேற்றுமையைப்போலவேயாம்

நபும்ஸக லிங்கப் பெயர்ச் சொற்களின் இரண்டாம் வேற்றுமையின் ரூபங்கள் எப்போதும் முதல் வேற்றுமையின் ரூபங்களைப் போன்றவாம்.

பெயர்ச் சொற்கள் புல்லிங்கம்

अगद மருந்து	पाद பாதம்	व्याध வேடன்
ओदन அன்னம் (ன்	प्रज्ञ ஞானி	शठ போக்கிரி
किंकर வேலைக்கார	बिडाल பூனை	शर பாணம்
कोश பொக்கிஷம்	भार சுமை	शिष्य சிடன்
गज யானை	मोक्ष மோக்ஷம்	सिंह சிங்கம்
ग्राम கிராமம்	योध वீரன்	सूर्य சூரியன்
जनक பிதா	वेद வேதம்	स्तेन திருடன்
देह உடல்	व्याघ्र புலி	स्वर्ग சுவர்க்கம்

நபும்ஸகலிங்கம்

अरण्य காடு	नगर பட்டணம்	वस्त्र வஸ்திரம்
तत्व உண்மை	पाप பாவம், தீமை	विष விஷம்
तृण புல்	पुस्तक புஸ்தகம்	सुवर्ण தங்கம்
धान्य தானியம்	मांस ஊன், மாமிசம்	

பத்தாங் கண தாதுக்கள் दण्ड् தண்டி, भक्ष् புசி, मार्ग् தேடு

ईश्वरं जनः पूजयति ।   बुधो मोक्षमिच्छति ।

नृपः शठान् दण्डयति ।   व्याधयो नरान् पीडयन्ति ।

रामो *ऽश्वमारोहति ।
व्याघ्रो मांसमत्ति ।
हरिर्हस्तौ क्षालयति ।
योधः शरान् क्षिपति ।
धनं लुभ्यति ।
स्तेनो धान्यं चोरयति ।
नगरं † गच्छामि ।
पापं वदसि ।
स्मरसि मित्राणि ।
मन्त्रान् वर्णयन्ति जनाः ।
वस्त्रं त्यजति मूर्खः ।

जलं पिबथ ।
कविर्बुधौ शंसति ।
पुत्रो जनकं सान्त्वयति
पुस्तकं मार्गयामि ।
सुवर्णं तोलयामः ।
ग्रामानटावः ।
फले भक्षयामि ।
कमलानि पश्यति ।
भारं वहति किंकरः ।
यतिर्देहं मुञ्चति ।
बिडालां‡स्ताडयति पुरुषः ।

---

* பதத்தின் ஈற்றிலுள்ள ए அல்லது ओ என்பதற்கு முன் अ கரம் வரின் இந்த अகரமானது முந்தியதில் இலயமாகிறது. அதாவது உச்சரிக்கப்படுகிறதும் எழுதப்படுகிறதுமில்லை; அது இருந்தவிடத்தில் அவக்கிரகமென்னும் ऽ இக்குறி இடப்படுகிறது.

† சலனத்தைக்காட்டுந் தாதுக்கள் எந்த இடத்தை நோக்கிய சலனத்தைக் காட்டுமோ அந்த இடத்தின் பெயரது இரண்டாம் வேற்றுமையையும், சில சமயம் நான்காம் வேற்றுமையையுங் கொண்டு முடியும்.

‡ ஈற்று न् ஆனது च, छ, त, थ, ट, ठ, என்பவைகள் வரின் அநுஸ்வாரமாகவும் விஸர்க்கமாகவும் மாறும்; இந்த உதாரணத்தில் விஸர்க்கமானது மீண்டும் स्, எனத்திரியும் (24-ம் பக்கம் * விதியைப் பார்க்குக.)

तृणा†न्यत्त्यश्वः । गृहं प्रविशामः ।

இராமன் புலிகளைப் பார்க்கிறான்
குதிரைகள் பொக்கிஷத்தை எடுத்துச் செல்கின்றன
ஞானி சுவர்க்கம் ஏறுகிறான்
சிங்கங்கள் யானைகளைப் பக்ஷிக்கின்றன
பழங்களை எண்ணுகிறான்
சன்னியாசி காட்(டை)டிற்குப் போகிறான்
வீரன் இரண்டு அம்புகளை எறிகிறான்
கடவுள் மனிதர்களை ரக்ஷிக்கிறார்
இரண்டு கிராமங்களை நுழைகிறோம்
புத்திரன் பிதாவை இன்புறுத்துகிறான்
மனிதர்கள் ஆமைகளைப் புசிக்கிறார்கள்
குரங்குகள் மரங்களை யேறுகின்றன
வேலைக்காரர்களைக் கேட்கிறான்
பாதங்களைக் கழுவுகிறார்கள்
இரண்டு மூடர்கள் விஷத்தைக் குடிக்கிறார்கள்
அரசர்கள் திருடர்களைத் தண்டிக்கிறார்கள்
புஸ்தகங்களை ஒழுங்குபடுத்துகிறார்கள்
அன்னத்தைப் புசிக்கிறீர்கள்
தோழர்கள் இராமனை நினைவு கூருகிறார்கள்
ஜனங்கள் அரசர்களைத் துதிக்கிறார்கள்
புத்திமான்கள் ஜனங்களை நடத்துகிறார்கள்

---

† ஈற்று इ, उ, ऋ, ऌ குறிலாயினும் நெடிலாயினும் இனமல்லாத உயிர்வரின் முறையே य्, व्, र्, ल् எனத் திரியும்.

உண்மையை அறிகிறேன்
வேதங்கள் சூரியனைத் துதிக்கின்றன
பிதா இரண்டு பாலர்களைக் கூப்பிடுகிறான்
மூடர்கள் ஞானிகளை நிந்திக்கிறார்கள்
அரசன் வீர(னோடு)னைப் பேசுகிறான்

2. இகார ஈற்றுப் பெயர்ச் சொற்கள்

உருபுகள்

	ஒருமை	இருமை	பன்மை
புல்லிங்கம்	स्	( )	न्

இருமையிலும், பன்மை உருபாகிய न् விலும், ஈற்று इ ஈ ஆகும்.

ஒருமை	இருமை	பன்மை
हरिस्	हरी	हरीन्

புல்லிங்கப் பெயர்ச் சொற்கள்

अतिथि விருந்தாளி बलि பிண்டம், உணா राशि குவியல்
अधिपति எஜமான் भिक्षुक பிச்சைக் [வு वायस காகம்
अलि வண்டு [கம் [காரன் विधि ஊழ்
कलि சண்டை, கல मणि இரத்தினம் व्रीहि தானியம், நெல்
गिरि காட்டுப்பன்றி रवि சூரியன் सारथि தேர்ப்பாகன்
பத்தாங்கணம் क्षल्-अ பூர்வக, கழுவு, गण् கவனி
மூன்றாங்கணம் दा [यच्छ्] கொடு, नन्द्-अभि பூ. களிகூர், விரும்பு
டை नी-आ பூ. கொண்டுவா, सृ-अनु பூ. அநுசரி, हृ
अपि அவ்யயம் கூட, உம். [(हर्) நீக்கு

वायसो बलिं भक्षयति । मणिं चोरयति स्तेनः ।

नृपतिररीन्* जयति ।
हरिं पीडयति व्याधिः ।
मेघो वारि सिञ्चति ।
कमलमलीन् प्रीणयति ।
रामो रविं नमति ।
पाणी प्रक्षालयामः ।
असीन्वहन्ति योधाः ।
कपिं मुञ्चामि ।
नृपतिं वर्णयन्ति कवयः ।
कविं जनः पूजयति ।
यतिं पृच्छन्ति शिष्याः ।
व्याधिं न गणयामि ।

अधिपतीन्किङ्करा अनुसरन्ति ।
उदधिं गच्छावः ।
ऋषी नमामः ।
व्याघ्रः किरीनत्ति ।
सारथीनाह्वयामः ।
ईश्वरो विधिं जयति ।
राशिं नयतः ।
व्रीहीनुञ्छति भिक्षुकः ।
गिरी† आरोहन्ति ।
अतिथीन्पूजयन्ति ब्राह्मणाः ।
कलीनभिनन्दति बुधः ।

---

* स् அல்லது त வர்க்கத்து மெய்யோடு श् அல்லது च வர்க்கத்து மெய்புணரின் முந்தியவர்க்கத்தின் எழுத்திற்குப் பதிலாக பிந்தியவர்க்கத்தின் எழுத்து முறையேவரும். அம்முறையாவது स्க்குப் பதிலாக श् ம், त्திற்குப்பதிலாக च् ம், थ्திற்குப்பதிலாக छ् ம் வரும். இவ்வாறே பிறவுமாம். தந்தத்திற் பிறக்குமெழுத்து (स्, त வர்க்கம்) க்களோடு மூர்த்தாவிற் பிறக்குமெழுத்து (ष्, ट வர்க்கம்) க்கள் புணரினும் இவ்வாறே ஆகும். அதாவது स् க்கு ष् ம், त्க்கு ट् ம் வரும்.

† சில இடங்களில் இரண்டு உயிர்கள் அடுத்து வரினும் இயல்பு புணர்ச்சியாம். அவற்றுள் இங்கு பொருந்தும் விதியாவது:—ஒரு பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்லின் இருமை ரூபம் ई, ऊ, ए எழுத்தில் முடியுமாயின் அந்த ஈற்று உயிர்கள் முன்வரும் உயிர்களோடு இயல்பாகப் புணரும்.

கவிகள் ருஷிகளைத் துதிக்கிறார்கள்
இராமன் கவிகளை வணங்குகிறான்
யதி மலைக்குப் போகிறான்
இரண்டு குரங்குகளை அடிக்கிறேன்
ஹரி குரியல்களைக் கொண்டுவருகிறான்
சையைத் தொடுகிறான்
மருந்துகள் வியாதிகளை நீக்குகின்றன
வேடன் இரண்டு காட்டுப் பன்றிகளைப்பார்க்கிறான்
ஹரி சத்ருவை அடிக்கிறான்
வீரன் சக்தியை எறிகிறான்
இரத்தினங்களை இச்சிக்கிறேன்
கடல்க(ளில்)ளைத் திரிகிறான்
யதிதன் தெருப்(பில்)பை பிரவேசிக்கிறான்
இரண்டு சாமங்களைக் கேட்கிறான்
ஜனங்கள் அரசர்களை இன்புறுத்துகிறார்கள்
அரசர்கள் கூட சன்னியாசிகளை நமஸ்கரிக்கிறார்கள்
குதிரைகள் தண்ணீர் குடிக்கின்றன
மனிதர்கள் பலியைக் கொடுக்கிறார்கள்

ஏழாம் பாடம்

மூன்றாம் வேற்றுமை

அகர இகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள்

			ஒருமை	இருமை	பன்மை
புல்லிங்கம்	அ	—	इन	भ्याम्	ऐस्
	इ	—	ना	भ्याम्	भिस्

भ्याम् வரின் ஈற்று அகரம் நீளும்.

रामेण இராமனால் रामाभ्याम् இரண்டு ராமர்களால் रामैः வெகு ராமர்களால்.

हरिणा हरिभ्याम् हरिभिः

நபும்ஸக லிங்கம் — அகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள், முதல் இரண்டாம் வேற்றுமைகள் தவிர மற்ற வேற்றுமைகளில் அகர ஈற்று புல்லிங்கத்தைப் போன்று உருபேற்கின்றன.

इ — आ भ्याम् भिः
वारिणा वारिभ्याम् वारिभिः

பெயர்ச் சொற்கள் புல்லிங்கம்

अलंकार ஆபரணம்	दण्ड தடி	यजमान யாகஞ் செய்.
आतप சூரியன், வெயி	देव தேவன்	[வோன்
इन्द्र இந்திரன் [ல்	नद् ஆறு	यत्न முயற்சி
उपहार வெகுமதி	नाविक மாலுமி	रथ தேர்
कर கை	पत्ति காலாள்	रावण இராவணன்
कासार ஏரி [தான்	बाण பாணம்	विधि விதி, ஏவல்
कौशिक குசவம்சத்	मन्त्र மந்திரம்	श्लोक கவி, பாட்டு

நபும்ஸக லிங்கம்

अन्न ஆகாரம்	गोत्र வம்சம்	रत्न இரத்தினம்
अर्घ्य பூசைத்திரவி	चक्र சக்கிரம்	शरीर உடல்
[யம்	नख நகம்	शास्त्र சாஸ்திரம்
इन्धन விறகு	पुण्य புண்ணியம்	शीर्ष தலை
खनित्र கட்டப்பாரை	यन्त्र யந்திரம்	सूक्त பாசுரம்

खञ्ज விசேஷணம். நொண்டியான. प्रभूत வி. மிகுதியான.

குறிப்பு:—விசேஷணங்கள் வசன, லிங்க, வேற்றுமைகளில் தம் தம் விசேஷியங்களை யொக்கும். உ-ம் प्रभूतं अन्नं இதில் प्रभूतं என்பது விசேஷணம் अन्नं விசேஷியம்.

முதற் கண தாதுக்கள்

खन् தோண்டு — नम्-अव प्र. வணங்கு, விளங்கு
गम्-अव प्र. அறி — குனி — हृ-प्र प्र. அடி, வெட்டு
चल् அசை, சலி — राज्-वि प्र. பிரகாசி, दृ (दार्) 10 க. கிழி

सह அ. கூட (இது மூன்றும் வேற்றுமையைக் கொண்டு முடியும்.)

पुरुषः स्तेनं दण्डेन ताडयति । कवयः श्लोकैर्नृपं वर्णयन्ति ।
शरीरमलङ्कारैर्भूषयति । बुधाः सुखेन जीवन्ति ।
नाविका नदेन समुद्रं प्रविशन्ति । नेत्राभ्यां पश्यति जनः ।
योधो बाणैररिं जयति । वारिणा हस्तौ क्षालयति ।
पादेन खञ्जः । पाणिभ्यां स्पृशति शीर्षम् ।
